II

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1.1 குடும்பம் எனும் எண்ணக்கருவை விளக்குக.

1.2.குடும்பம் எனும் எண்ணக்கரு தொடர்பாக வரைவிலக்கணங்களை முன்வைத்த இரு சமூகவியலாளர்களின் பெயர்களைத்தருக.

1.3.பிரதான குடும்ப அமைப்பு முறைகள் எத்தனை ? அவற்றை பெயரிடுக.

1.4.பெற்றார் மற்றும் பிள்ளைகள் மட்டும் இருக்கின்ற குடும்பத்தின் பெயர் யாது?

2.1.கருக்குடும்பத்திற்கான வேறு பெயர்கள் எவை?

2.2 கருக்குடும்பத்தின் அமைப்பினை வரைக.

2.3 கருக்குடும்பத்தில் வெளிப்படும் பிரதான இலட்சணங்கள் எவை?

2.4 கருக்குடும்பத்தில் பாதுகாப்பு தொடர்பாக ஏற்படக்கூடிய இரு பிரச்சினைகளை குறிப்பிடுக.

3.1. கூட்டுக்குடும்பம் என்பதை விளக்குக.

3.2 கூட்டுக்கடும்பத்திற்கான வேறு பெயர்களைக்குறிப்பிடுக.

3.3 விரிவான குடும்பத்தின் அமைப்பினை வரைக.

3.4 விரிவான குடும்பத்தின் அங்கத்தவரிடையே காணக்கூடிய குணவியல்புகள் ஐந்து கூறுக.

4.1 குடும்பத்தின் இருப்புக்காலத்தின் பிரதான கட்டங்களைப்பெயரிடுக.

4.2 முதலாவது கட்டத்தை பெயரிட்டு விளக்குக.

4.3 இரண்டாம் கட்டத்தை பெயரிட்டு விளக்குக.

5.1 குடும்பத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய மிக முக்கியத் தேவையை எழுதுக.

5.2 குடும்ப உறுப்பினர்களின் தேவை குடும்பத்தின் மூலமாக நிறைவேற்றப்படுவது எவ்வாறு என்பதை எழுதுக.

5.3 குடும்பமொன்றில் கணவனால் மனைவிக்கு ஆற்றப்படவேண்டிய பொறுப்புகளும் கடமைகளும் எவை?

5.4 பெற்றோரால் பிள்ளைகளுக்கு ஆற்றப்படவேண்டிய கடமைகளும் பொறுப்புகளும் எவை?

www.lkedu.lk

6.1 பிள்ளைகளால் பெற்றோருக்கு ஆற்றப்படவேண்டிய கடமைகளும் பொறுப்புகளும் எவை?
6.2 சகோதரனால் சகோதரிக்கு ஆற்றப்படவேண்டிய பொறுப்புகள் எவை?
6.3 குடும்பத்தால் சமூகத்திற்கு ஆற்றப்படவேண்டிய கடமைகளும் பொறுப்புகளும் எவை?
6.4 சமூகத்தால் குடும்பத்திற்கு ஆற்றப்படவேண்டிய கடமைகள் பொறுப்புகள் 3 தருக?

7.1 வீடொன்றைக்கட்டும்போது முதலாவதாக கவனம் செலுத்த வேண்டிய விடயம் யாது?
7.2 வீடொன்றைக்கட்டுவதற்காக நிலத்தைத்தெரிவ செய்யும் போது அவதானம் செலுத்த வேண்டிய விடயம் யாது?
7.3 நிலத்தை தெரிவு செய்யும்போது அதன் உள்கட்டமைப்பை குறிப்பிடுக.
7.4 நிலத்தை தெரிவு செய்யும்போது அதன் சுற்றுப்புறச்சூழலில் காணப்பட வேண்டிய இலட்சணங்களை குறிப்பிடுக.

8.1 வீடொன்றைக் கட்டுவதற்காக திட்டமிடும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் எவை?
8.2 காற்றோட்டம் என்பதால் கருதப்படுவது என்ன?
8.3 குறுக்குக்காற்றோட்டம் என்றால் என்ன?
8.4 இயற்கை வெளிச்சம் , காற்றோட்டம் என்பவற்றை பெற்றுக்கொள்ளக்கூடிய முறைகளைக் கூறுக.

9.1 வீட்டினுள் இயற்கை , வெளிச்சம் காற்றோட்டம் என்பவற்றை பெற்றுக்கொள்வதால் கிடைக்கும் பயன் யாது?
9.2 வீட்டு வரைபடத்தை தயாரிக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் யாவை?
9.3 வீட்டு வரைபடத்தை தயாரிக்கும் போது அளவுத்திட்டத்தை காட்டும் முறையை குறிப்பிடுக.
9.4 வீட்டு வரைபடத்தை தயாரிக்கும் போது சுவரை அடையாளப்படுத்துவது எவ்வாறு?

10.1 வீட்டு வரைபடத்தை தயாரிக்கும் போது கதவுகளை அடையாளப்படுத்துவது எவ்வாறு?
10.2 வீட்டு வரைபடத்தை தயாரிக்கும் போது ஜன்னல் , மின்விளக்கு , மின்விசிறி என்பவற்றை அடையாளப்படுத்தும் முறையைக் குறிப்பிடுக?
10.3 பிரதான படுக்கையறையின் அளவுத்திட்டம் யாது?
10.4 சமையலறையின் அமைவிடம் எவ்வாறு இருக்க வேண்டும்?

11.1 வீட்டைத்திட்டமிடும்போது அறைகளின் அமைப்பு எவ்விதம் அமைய வேண்டும்?
11.2 வரவேற்பறை மற்றும் குளியலறைகளுக்கான உட்கதவுகளாக பயன்படுத்தக்கூடிய கதவு வகைகள் எவை?
11.3 வீட்டின் கதவு ஜன்னல்களின் அமைப்பு எவ்விதம் அமைய வேண்டும்?
11.4 படுக்கையறையின் கதவு எவ்விதம் அமைக்கப்பட வேண்டும்?

12.1 படுக்கையறையொன்றின் யன்னலுக்குப் பயன்படுத்தக்கூடியது ..... கண்ணாடி வகையாகும்.
12.2 ..... நிறைவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் இயலுமானவரை சுவர்களில் கதவு யன்னல்கள் சமாந்தரமாக அமைக்கப்பட வேண்டும்.

www.kedu.lk

12.3 இடஅளவு குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் வீட்டின் வெவ்வேறு பாகங்களை சேர்த்து ..... அலகு எனும் அடிப்படையில் அமைத்துக் கொள்ளலாம்.

12.4 பல காரியங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக பொதுவாக ஓரிடத்தை பயன்படுத்துவது ..... அலகு எனப்படும்.

13.1 படுக்கைறையில் இருக்கக்கூடிய இலாச்சுடன் கூடிய கட்டில் என்ன வகையான தளபாடம்?

13.2 அடுக்குக் கட்டில் , மடிக்கும் கட்டில் , சுவரலுமாரி என்பன எவ்வகை தளபாடங்களாகும்?

13.3 அத்தகைய வீட்டுத்தளபாடங்கள் இரண்டினை எழுதுக.

13.4 வீட்டு அலங்காரத்திற்கென பயன்படுத்தக்கூடிய துணை அலங்காரப்பொருட்கள் யாவை?

www.lkedu.lk